47

# ஐ.ஐ.டி-யில் யாரும் பெறலாம் சம்மர் ஃபெல்லோஷிப்!



ஒரு நல்ல கல்வி நிறுவனம், கொட்டிக்கிடக்கும் பரந்துபட்ட கல்வி வாய்ப்புகளை மாணவர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும். வகுப்பறையைத் தாண்டிய தேடல்களை அவர்களுக்கு உருவாக்க வேண்டும். இன்றிருக்கும் போட்டி நிறைந்த உலகில் அப்படி விசாலமான தேடலோடு உருவாகும் மாணவர்களே நல்ல பணி வாய்ப்புகளைப் பெற்று நிலைக்க முடியும்.

தமிழகத்தில் 400-க்கும் அதிகமான பொறியியல் கல்லூரிகள் உள்ளன. ஏறக்குறைய அதே அளவுக்கு கலை, அறிவியல் கல்லூரிகள் உள்ளன. இங்கெல்லாம் பாடத்திட்டத்துக்குத் தரும் முக்கியத்துவத்தை வகுப்பறைக்கு வெளியே கொட்டிக்கிடக்கும் வாய்ப்புகளை மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ளத் தருவதில்லை. இது மிகவும் வருந்தத்தக்கது.

நாங்களெல்லாம் படிக்கும் காலத்தில், “இங்கே ஒரு இன்டர்ன்ஷிப் வாய்ப்பு வந்திருக்கிறது”, “இந்த இடத்தில் ஒரு செமினார் நடக்கிறது” என்றெல்லாம் மாணவர்களுக்கு பேராசிரியர்கள் செய்திகளைத் தந்துகொண்டே இருப்பார்கள். எங்கள் பேராசிரியரின் மாணவர் ஒருவர் அமெரிக்காவில் படித்து அங்கேயே வேலை செய்கிறார். அவர் ஒருமுறை தமிழகம் வந்தபோது, அண்ணா பல்கலைக்கழகத்தின் விவேகானந்தா ஆடிட்டோரியத்தில் ஒரு செமினாரே ஏற்பாடு செய்தார் எங்கள் பேராசிரியர். நிறைய பேருக்கு அது திறப்பாக அமைந்தது. இன்று தகவல் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. வாய்ப்பு, வசதிகள் பெருகியுள்ளன. ஆனால், செமஸ்டர் தேர்வுகளைத் தாண்டி, மாணவர்களுக்கு கல்லூரிக்கு வெளியே இருக்கும் வாய்ப்புகளை ஆசிரியர்கள் அறியத்தருவதே இல்லை.

இந்தியா முழுவதும் உள்ள சிறந்த கல்வி நிறுவனங்கள், குறிப்பாக மத்திய அரசுக் கல்வி நிறுவனங்கள் சம்மர் இன்டர்ன்ஷிப், சம்மர் ஃபெல்லோஷிப் என்ற பெயர்களில் குறுகிய காலப் பயிற்சிகளை வழங்குகிறார்கள். இளநிலை, முதுநிலை படித்துக்கொண்டிருக்கும் காலத்திலேயே இவற்றில் மாணவர்கள் பங்கேற்க முடியும்.

பொறியியல் படிக்கும் மாணவர்களுக்கு இந்தியா முழுவதும் இருக்கும் ஐ.ஐ.டி-க்கள் சம்மர் ஃபெல்லோஷிப் தருகின்றன. அதேபோல அறிவியல் பிரிவு படிக்கும் மாணவர்களுக்கு இந்தியா முழுதுமுள்ள *Indian Institute of Science Education and Research (IISER)*, பெங்களூரு *Indian Institute of Science* போன்ற நிறுவனங்கள் சம்மர் ஃபெல்லோஷிப்பை வழங்குகின்றன. அரசுக் கல்லூரி, தனியார் கல்லூரி என எங்கு படிக்கும் மாணவர்களும் இவற்றில் சேர முடியும்.







சம்மர் ஃபெல்லோஷிப்புக்கான விதிமுறைகள் ஒவ்வொரு நிறுவனத்துக்கும் வேறுபடும். 8 முதல் 12 வாரங்கள் இந்தப் பயிற்சி வழங்கப்படும். இதுகுறித்து எல்லா நிறுவனங்களும் நாளிதழ்களில் விளம்பரம் தருகின்றன. ஆனால் நாம் அதைப் பொருட்படுத்துவதில்லை.

ஐ.ஐ.டி.-க்கள் உட்பட மத்திய அரசு நிறுவனங்கள் நடத்தும் இந்த ஃபெல்லோஷிப் புரோகிராமில் இந்தியாவின் எந்த மாநிலத்தில் இருந்தும் பங்கேற்கலாம். இதில் பங்கேற்பது உங்கள் புரொபைலில் கூடுதலாக ஒரு நட்சத்திர அந்தஸ்தை உருவாக்கும். தவிர, அங்கு கிடைக்கும் தொடர்புகள் நீங்களே எதிர்பாராத உயரத்துக்கு உங்களைக் கொண்டுபோகும்.

ஐ.ஐ.டி டெல்லியில் 12 வாரம் சம்மர் ஃபெல்லோஷிப் புரோகிராம் வழங்கப்படுகிறது. இந்தியாவில் எங்கிருந்தும் டெல்லிக்குப் போய் வர போக்குவரத்துச் செலவை இந்த கல்வி நிறுவனமே வழங்கிவிடும். தங்குமிடமும் உணவும் ஐ.ஐ.டி ஹாஸ்டலிலேயே கட்டணமில்லாமல் வழங்கப்படும். தவிர, வாரத்துக்கு 500 ரூபாய் ஃபெல்லோஷிப்பாகத் தருவார்கள். இந்தப் பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்படும் மாணவர்கள் ஒரு ரூபாய்கூட ஐ.ஐ.டிக்குச் செலுத்தத் தேவையில்லை. இந்தியாவில் இருக்கும் அரசு, தனியார் பொறியியல் கல்லூரிகளில் படிக்கும் மூன்றாமாண்டு மாணவர்கள் இதில் சேரலாம். எந்தப் பிரிவாக இருந்தாலும் ஓ.கே. மே அல்லது ஜூலையில் பயிற்சி தொடங்கும்.

ஐ.ஐ.டி மெட்ராஸ் நிறுவனமும் சம்மர் ஃபெல்லோஷிப் வழங்குகிறது. மூன்றாமாண்டு பி.இ, பி.டெக் படிப்பவர்கள், எம்.இ, எம்.சி.ஏ, எம்.எஸ்ஸி, எம்.பி.ஏ முதலாமாண்டு படிப்பவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். அவரவர் சார்ந்த துறைகளில் நடக்கும் ஆராய்ச்சிகளில் இந்த மாணவர்கள் இணைக்கப்படுவார்கள். வகுப்புகளிலும் இடம் பெறுவார்கள். இரண்டு மாத காலம் இந்த ஃபெல்லோஷிப் வழங்கப்படும். மாதம் ரூ. 6,000 தருவார்கள். மே மாதம் இது தொடங்கும்.

ஐ.ஐ.டி கான்பூரில் ஒரு ஃபெல்லோஷிப் புரோகிராம் உண்டு. *Students-Undergraduate Research Graduate Excellence program* என்று பெயர். சுருக்கமாக *SURGE* என்பார்கள். இதற்கும் நம் மாணவர்கள்




விண்ணப்பிக்கலாம். எட்டு வார கால ஃபெல்லோஷிப் இது. 950 பேர் சேர்க்கப்படுவார்கள். ரூ.12,500 ஃபெல்லோஷிப் கிடைக்கும். பி.இ, பி.டெக் நான்காமாண்டு மாணவர்கள், பி.எஸ்ஸி, பி.ஏ மூன்றாமாண்டு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். ஐந்தாண்டு இன்டக்ரேடட் டிகிரி படிப்பவர்கள், நான்காமாண்டு, ஐந்தாமாண்டுகளிலும், எம்.எஸ்ஸி போன்ற முதுகலைப் படிப்பு படிப்பவர்கள் இரண்டாவது ஆண்டிலும் விண்ணப்பிக்கலாம்.

ஐ.ஐ.டி கரக்பூர் ஒரு ஃபெல்லோஷிப் புரோகிராம் வைத்திருக்கிறது. மாதம் ரூ. 8,000 தருவார்கள். கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கும் மாணவர்களுக்கு இது உபயோகமாக இருக்கும். அதேபோல ஐ.ஐ.டி பம்பாயில் *Free/Libre and Open Source Software for Education (FOSSEE)* என்று புரோகிராம் வைத்திருக்கிறார்கள். மாதம் ரூ. 7500 ஃபெல்லோஷிப் தருகிறார்கள். எம்.எஸ்ஸி படிப்பவர்கள் இரண்டாமாண்டிலும், இளநிலை படிப்பவர்கள் மூன்றாவது, நான்காவது ஆண்டுகளிலும் விண்ணப்பிக்கலாம். இது ஆறு வார புரோகிராம். நேர்காணல் அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். ஒலிம்பியாட் போன்ற தேசியப் போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

இந்தியாவில் இருக்கும் 23 ஐ.ஐ.டி-களும் ஒருசில என்.ஐ.டி-களும் மற்றும் மத்திய அரசின் கீழ்வரும் ஆராய்ச்சி நிறுவனங்களிலும் இதுபோன்ற சம்மர் புரோகிராம்கள் உண்டு. ஐ.ஐ.டி-யில் படிக்க முடியவில்லை என்று வருந்தும் மாணவர்களுக்கு இது நல்வாய்ப்பு. கிடைக்குமா, கிடைக்காதா என்று தயங்கத் தேவையில்லை. பெரும்பாலானோர் இதை அறிந்திருக்கவில்லை என்பதால் நமக்குக் கிடைக்க நிறைய வாய்ப்பிருக்கிறது.

ஐ.ஐ.டி-க்களில் வழங்கப்படும் எல்லா இன்டர்ன்ஷிப், ஃபெல்லோஷிப் புரோகிராம்களுக்கும் பொதுவான தகுதி, மாணவர்கள் தாங்கள் படிக்கும் வகுப்பில் டாப்-10 இடங்களுக்குள் இருக்க வேண்டும். படிக்கும் கல்லூரியில் இருந்து நிர்வாகமோ, துறைத்தலைவரோ, பேராசிரியரோ, 'மாணவர் பங்கேற்கலாம்' எனத் தடையில்லாச் சான்று வழங்கவேண்டும். தங்குமிடம், போக்குவரத்துச் செலவு, உணவு எல்லாவற்றையும் அந்த நிறுவனமே ஏற்றுக்கொள்ளும்.

பெங்களூரில் இருக்கும் இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆப் சயின்ஸ் நிறுவனமும் மே முதல் ஜூன் வரை நிறைய சம்மர் இன்டர்ன்ஷிப் புரோகிராம்களை நடத்துகிறது. ஒவ்வொரு துறையிலும் புரோகிராம்கள் உண்டு. குறிப்பாக ரோபோட்டிக்ஸ் துறையில் வழங்கப்படும் இன்டர்ன்ஷிப் முக்கியமானது. நானோ சயின்ஸ் புரோகிராமும் சிறப்பானது. ஆன்லைன் வழியாகவும் இங்கு இன்டர்ன்ஷிப் வழங்கப்படுகிறது. இளநிலையில் மூன்றாமாண்டு, முதுநிலையில் இரண்டாமாண்டு படிக்கும் மாணவர்கள் செல்லலாம். இதேபோல வணிகவியல், புள்ளியியல் படிக்கும் மாணவர்கள் கொல்கத்தாவில் உள்ள இந்திய புள்ளியியல் நிறுவனம் வழங்கும் சம்மர் இன்டர்ன்ஷிப்களில் பங்கேற்கலாம். கொல்கத்தா, சென்னை வளாகங்களில் எட்டு வாரம் தருகிறார்கள்.

இந்த சம்மர் கேம்ப்களில் என்ன கிடைக்கும்? நாளை உயர்கல்விக்கு நீங்கள் விண்ணப்பிக்கும்போது இது கூடுதல் தகுதியாக உங்களுக்கு மாறும். நிறுவனங்கள் தரும் இன்டர்ன்ஷிப் சான்றிதழ்கள் தகுதி மிக்க ஆவணங்களாக இருக்கும். வேலைகளிலும் முக்கியத்துவம் கிடைக்கும். நீங்கள் தேடல் மிக்கவராக அறியப்படுவீர்கள். போட்டியில் பலரைப் பின்னுக்குத் தள்ளுவீர்கள். நிறைய கற்றுக்கொள்ளவும் முடியும். உங்கள் அணுகுமுறை மாறும். இன்னும் கூடுதலாகத் தேடத் தொடங்குவீர்கள்.

இதேபோன்ற இன்னொரு வாய்ப்பையும் உங்களுக்கு அறியத் தருகிறேன். உலகெங்கும் உள்ள டாப் ரேங்கிங் பேராசிரியர்கள் அவரவர் துறைகளில் ஏராளமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதற்காக அவர்களுக்குக் கோடிக்கணக்கில் நிதி வழங்கப்படுகிறது. அந்த ஆராய்ச்சிகளில் உதவுவதற்காகவும் பங்கேற்பதற்காகவும் தகுதியான மாணவர்களை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். இணையத்தில் வெளிப்படையாக அவர்கள் மாணவர்களை அழைக்கிறார்கள். தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு கணிசமான உதவித்தொகை தருகிறார்கள். ஆராய்ச்சிகளில் இணைத்துக்கொள்கிறார்கள். தமிழகத்திலிருந்து இந்தப் பேராசிரியர்களை அடையாளம் கண்டு, கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே அவர்களோடு இணைந்து வாழ்க்கையை மாற்றிக்கொண்ட மாணவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்.

நம் சென்னையிலேயே ஒரு பேராசிரியர் இருக்கிறார். பெயர் தீபக். கிண்டி பொறியியல் கல்லூரியில் மைனிங் இன்ஜினீயரிங் படித்தார். இப்போது அவர் பள்ளிக்கரணையில் இருக்கும் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் ஓஷன் டெக்னாலஜியில் வேலை செய்கிறார். ஆழ்கடல் மைனிங் பற்றி உலகளவில் இவரது ஆராய்ச்சிகள் புகழ்பெற்றவை. சீனா, கொரியாகூட எட்ட முடியாத ஆழத்தை இவர் எட்டியிருக்கிறார். இவர் மட்டும் 289.68 கோடி ரூபாய் மதிப்பில் 5 ஆராய்ச்சிகளை மேற்கொண்டுவருகிறார். இவருக்கு நிறைய மேன்பவர் தேவைப்படுகிறது. இந்தத் துறையில் படிப்பவர்கள், இவரைப் போன்றவர்களை அணுகினால் உதவித்தொகையும் தந்து ஆராய்ச்சியிலும் இணைத்துக்கொள்வார்கள். உலகம் முழுவதும் இப்படி நிறைய பேராசிரியர்கள் இருக்கிறார்கள்.

நான் பல இடங்களில் என் மாணவி நித்யஸ்ரீ மகேஸ்வரனைப் பற்றிப் பெருமையாகச் சொல்வதுண்டு. 11-ம் வகுப்பு படிக்கும்போது என்னிடம் வந்தார். சென்னையைச் சேர்ந்த இவரை திருச்சி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் பி.இ. பயோ டெக்னாலஜி சேர்த்தோம். மிகுந்த தேடல் உள்ளவர். படிக்கும்போதே, ஐ.ஐ.டி மெட்ராஸ் மற்றும் டெல்லி பல்கலைக்கழகத்தில் சம்மர் இன்டர்ன்ஷிப் செய்தார். ஜார்ஜியாவில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் இணையவழி இன்டர்ன்ஷிப்பில் சேர்ந்தார்.

சுவிட்சர்லாந்தில் உள்ள யுனிவர்சிட்டி ஆப் லவுசானாவில் ஆய்வு செய்து வரும் ஒரு பேராசிரியரை மெயிலில் தொடர்பு கொண்டார். இவருடைய புரொபைலைப் பார்த்த அவர், விசா, போக்குவரத்து, தங்குமிடம், உணவு எல்லாவற்றுக்கும் ரூ. 1.38 லட்சம் உதவித்தொகை தந்து அழைத்துக்கொண்டார். 2 மாதங்கள் அந்தப் பேராசிரியர் இன்டர்ன்ஷிப் கொடுத்தார். இந்தாண்டுதான் இவர் பி.இ முடிக்கப்போகிறார். ஆனால், அமெரிக்காவில் உள்ள *University of Kentucky, University of South Florida, University of Kansas Medical Center, University of Okhlahoma, Indiana University School of Medicine* ஆகிய கல்வி நிறுவனங்கள் அவரை முழு உதவித்தொகையோடு படிக்க அழைத்திருக்கின்றன. *Indiana University School of Medicine* நிறுவனத்தை அவர் தேர்வு செய்திருக்கிறார்.

ஒரு அரசுக்கல்லூரியில் படித்த மாணவி... தன் தேடலால் ஒரு ரூபாய்கூட செலவு செய்யாமல் இவ்வளவு பெரிய இலக்கை எட்டியிருக்கிறார். இதுதான் இன்று எல்லா மாணவர்களுக்கும் தேவை!

**- கற்போம்...**